செ.வெ.எண்: 35 நாள்:18.08.2021

பத்திரிக்கைசெய்தி

**மத்திய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ,மாணவியர்கள் 2021-22 ஆம் கல்வி ஆண்டிற்கான புதியது கல்வி உதவித் தொகை (Fresh application) விண்ணப்பித்தல்:-**

மத்திய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ/மாணவிகளின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00/- இலட்சத்திற்கு மிகாமல் உள்ளமாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகை மாணவருக்கு ஒருவருக்கு ஆண்டிற்கு அதிகபட்ச ரூ.2.00/- இலட்சம் வரை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி கல்வி உதவித்தொகைக்கு 2021-22-ம் கல்வியாண்டில் புதியது(Fresh application)விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான மாணவர்கள் கீழ்கண்ட முகவரியிலுள்ள இயக்கத்தையோ அல்லுத நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள இரண்டாம் தளம் அறைஎண்:- 222-ல் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலகத்தினை அணுகியோ அல்லது கீழ்க்குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பம் அனுப்பக்கோரி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் மேற்படி 2021-22-ம் நிதியாண்டிற்கான புதியதுகல்வி உதவித்தொகை விண்ணப்பத்தினை மாணவர்கள் பூர்த்திசெய்து சம்பந்தப்பட்ட கல்விநிறுவனத்தில் சமர்ப்பிக்கவேண்டும். கல்வி நிறுவனங்கள் தங்களது சான்றொப்பத்துடன் தகுதியான விண்ணப்பத்தினை பரிந்துரைசெய்து கீழ்கண்டமுகவரிக்கு பூர்த்திசெய்து விண்ணப்பங்களை 30.11.2021-க்குள் அனுப்பிவைக்கவேண்டும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகுதியுடையமாணவர்கள் கல்வி உதவித்தொகை பெற்று பயனடையுமாறு நாகப்பட்டினம் மாவட்டஆட்சித்தலைவர் மருத்துவர். அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப.,அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**